## வளவுகளில் மேற்கொள்ளப்படும் பரிசோதனைகள் சம்பந்தமாக வாடிக்கையாளர்களை அறிவுறுத்துதல் சரிபார்ப்பு/ஆய்வு பற்றிய அவதானிப்புகள்

பின்வரும் ஆகக்குறைந்த தேவைப்பாடுகள் சம்பந்தமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சட்டத்தில் குறித்துரைக்கப்பட்டவாறு வளவுகளின் பதிவை மேற்கொள்ள வேண்டும்.

(ஆ) அட்டவணை I மற்றும் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள பதார்த்தங்களை அவற்றின் இறக்குமதி, ஏற்றுமதி அல்லது வர்த்தக நோக்கங்களுக்காக மட்டும் பயன்படுத்த முடியும் என்பதுடன்,

2008 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க உளமருமட்சியை ஏற்படுத்தக்கூடிய பதார்த்தங்களையும் போதையூட்டும் ஔடதங்களையும் சட்டவிரோதமான முறையில் கடத்துவதற்கு எதிரான சமவாயச் சட்டத்தின் 19 ஆம் பிரிவிற்கு ஏற்புடையவாறாகும்.

மேற்குறித்த தகவல்களுக்கு மேலதிகமாக, ஆய்வின்போது பின்வரும் துறைகள் உள்ளடக்கப்படுகிறது:

1. முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களைக் களஞ்சியத்திடுவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள முறைகள்.
2. பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்டு நடவடிக்கைகள்.
3. முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களின் கைப்பொறுப்பு நீக்கத்திற்கு கையாளப்பட்டுள்ள முறைகள்
4. வளவினுள் அதிகாரமற்ற உட்பிரவேசித்தல்கள் அல்லது இரசாயனப் பதார்த்தங்கள் களவாடப்படுவதைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்
5. பதிவுகளைப் பேணுவதற்கான (ஆவணப்படுத்தல்) முறைகள்.
6. வழங்குநர் நிரல் (பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம்)
7. வாடிக்கையாளர் நிரல் (பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், தொலைநகல் இலக்கம்)

***1) முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களைக் களஞ்சியத்திடுவதற்கு ஏற்படுத்தப்பட்டுள்ள முறைகள்.***

பின்வரும் விடயங்கள் தொடர்பில் களஞ்சியசாலையின் பராமரிப்ப பற்றி அவதானிக்கப்படுகிறது.

| இல. | சிபார்சுகள் |
|---|---|
| 1. | தகரப் பீப்பாயின் மேல் இரசாயனப் பதார்த்தத்தின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| 2. | அபாயத்தின் அளவு, தீப்பற்றக்குடிய நிலை, உறுதிப்பாடு முதலின தகவல்கள் தகரப் பீப்பாயின் மேல் குறிப்பிடப்பட்டுள்ளது. |
| 3. | புனல்கள் இல்லாமல் தகரப் பீப்பாய்கள் பொறியிடப்பட்டுள்ளன. |
| 4. | தகரப் பீப்பாய்கள் சிறந்த நிலையில் உள்ளன. (ஒழுக்கு ஏற்படுவதற்கான / வழிந்தோடுவதற்கான வாய்ப்பு இன்றி) |
| 5. | தகரப் பீப்பாய்கள் களஞ்சியத்திடப்பட்டுள்ள இடம் மறைப்பு செய்யப்பட்டுள்ளது. |
| 6. | தேவையான அளவு காற்றோட்டம் உள்ளது. |
| 7. | களஞ்சியத்திடுவதற்கான உயரம், மூன்று தகரப் பீப்பாய்களுக்கு மேற்படாது. |
| 8. | தகரப் பீப்பாய்கள் நிலைக்குத்தாக அடுக்கிவைக்கப்பட்டுள்ளன. |
| 9. | தகரப் பீப்பாய்கள் மரப்பலகை அல்லது பிளாஸ்ரிக் தட்டுக்கள் (பெல்லட்) மேல் வைக்கப்பட்டுள்ளது. |
| 10. | இறாக்கைகளுக்கு இடையில் குறைந்தபட்சம் மூன்று அடி இடைவெளி உள்ளது. |
| 11. | இரசாயனப் பதார்த்தங்களின் காலாவதியாகும் திகதி குறிப்பிடப்பட்டுள்ளத. |

**2) பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்டு நடவடிக்கைகள்.**

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் பாதுகாப்பிற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் அவதானிக்கப்படுகின்றன:

| இல. | சிபார்சுகள் |
|---|---|
| 1. | வடிகால் தொகுதியொன்று உள்ளது (மத்திய/ சுற்றயல்) |
| 2. | வழிந்தோடுவதையும் பரவுவதையும் தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (கரங்களினால் / பொறிமுறையாக) |
| 3. | வழிந்தோடிய பதார்த்தங்களை சேகரிக்கும் தாங்கிகள்/ நிலக்கீழ் தொட்டிகள் உள்ளன. |
| 4. | தீயணைப்பு முற்காப்பு முறைகள் / தீயணைப்பு உபகரணங்கள் உள்ளன. |
| 5. | பாதுகாப்புக் குறியீடுகள் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (SIRE / தானாக ஒழுங்கமைந்துள்ளது.) |
| 6. | பாதுகாப்புக் குறியீடுகள் பின்பற்றப்பட்டுள்ளன. |
| 7. | இடர் மதிப்பீடு / MSDS ஒப்பீட்டு நிரல் (check list) காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. |
| 8. | தனிநபர் பாதுகாப்பு உபகரணங்கள் உள்ளன. |

**3) முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களின் கைப்பொறுப்பு நீக்கத்திற்கு கையாளப்பட்டுள்ள முறைகள்**

பின்வரும் விடயங்களுக்கு ஏற்புடைய முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களின் கைப்பொறுப்பு நீக்கம் (disposal) சம்பந்தமான அவதானிப்புகள் செய்யப்படுகின்றன:

| **இல.** | **சிபார்சுகள்** |
|---|---|
| *1.* | *கைப்பொறுப்புநீக்கத் தாங்கிகள் / கொள்கலன்கள் உள்ளன.* |
| *2.* | *புனல்கள் இல்லாமல் கைப்பொறுப்புநீக்கத் தாங்கிகள்/கொள்கலன்கள் பொறியிடப்பட்டுள்ளன.* |
| *3.* | *உள்ளக வடிகால் அமைப்புகள் உள்ளன.* |
| *4.* | *பொது வடிகால் அமைப்புகள் உள்ளன.* |
| *5.* | *அபாயகரமான கழிவுப்பொருள்கள், எளிதில் தீப்பற்றக்கூடிய பதார்த்தங்கள் என்றவாறு தாங்கிகளில்/ கொள்கலன்களில் பெயரிடப்பட்டுள்ளன.* |
| *6.* | *கழிவுப்பொருள்களில் அடங்கியுள்ள கூறுகள் கொள்கலன்களிலுள்ள லேபலில் குறிப்பிடப்பட்டுள்ளன.* |
| *7.* | *களஞ்சியத்திடும் வரையறை< தீவிரமான அபாயகர கழிவுப்பொருள் ¼ கலன் அல்லது சாதாரண நச்சுக் கழிவுப்பொருள் 55 கலன்களுடன் வரையறுக்கப்பட்டது.* |
| *8.* | *கழிவுப்பொருள் சேகரிக்கப்படும் கொள்கலன்கள் சிறந்த நிலையில் உள்ளன என்பதுடன், கைப்பொறுப்பு நீக்கச் செயன்முறைகள் சரியாகப் பின்பற்றப்பட்டுள்ளன.* |
| *9.* | *பாவனைக்குப் பெறப்பட்ட இரசாயனப் பதார்த்தங்களின் பொதியிடல் கொள்கலன்களில் லேபல் இடப்பட்டுள்ளது.* |
| *10.* | *கழிவுப்பொருள் சேகரிக்கப்படும் பேசின் அல்லது நில வடிகால்களுக்கு அருகில் இரண்டாம்நிலை கழிவுப்பொருள் இடும் கொள்கலன் வைக்கப்பட்டுள்ளது.* |

| | |
|---|---|
| *11.* | கழிவுப்பொருள் சுத்திகரிப்பு செய்யப்படுவதுடன், மீள் பாவனைக்கு எடுக்கப்பட்டுள்ளது. |
| *12.* | நிலையான தீயணைப்பு உபகரணத் தொகுதியொன்று உள்ளது. |

**4. வளவினுள் அதிகாரமற்ற உட்பிரவேசங்கள் அல்லது இரசாயனப் பதார்த்தங்கள் களவாடப்படுவதைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

பின்வரும் விடயங்கள் தொடர்பாக முன்னோடி இரசாயனப் பதார்த்தங்களுக்கான அதிகாரமற்ற உட்பிரவேசித்தல்களைத் தடுத்தல் பற்றி அவதானிப்புச் செய்யப்படுகிறது:

| **இல.** | **சிபார்சுகள்** |
|---|---|
| *1.* | பாதுகாப்பு ஒளிப்படக்கருவிகள் (கமராக்கள்) பொருத்தி இணைக்கப்பட்டுள்ளன. |
| *2.* | பாதுகாப்புச் சேவை 24 மணி நேரமும் இயங்குநிலையில் உள்ளது. |
| *3.* | களஞ்சியத்திடப்பட்டுள்ள இரசாயனப் பதார்த்தங்களின் அளவு, நாளாந்தம் கணிப்பிடப்படுகிறது. |
| *4.* | உள்ளக கணக்காய்வு மேற்கொள்ளப்படுகிறது. |
| *5.* | வேலையாட்களின் நாளாந்த உள்வருகையும் வெளியேற்றமும் சோதனைக்கு உட்படுத்தப்படுகிறது. |
| *6.* | ஆரம்ப இடத்திலிருந்து களஞ்சியத்திடும் வளவுகள் வரையில் இரசாயனப் பதார்த்தங்களைப் போக்குவரத்து செய்யும்போது குறித்த GPS முறைமை ஊடாக மேற்பார்வை செய்யப்படுகிறது. |

## 5. பதிவுகளைப் பேணுவதற்கான (ஆவணப்படுத்தும்) முறைகள்:

பின்வரும் விடயங்கள் தொடர்பாக முன்னோடி இரசாயனப் பதார்த்தங்கள் பற்றிய தகவல்களின் ஆவணப்படுத்தல் பற்றி அவதானிப்புச் செய்யப்படுகிறது:

| இல. | சிபார்சுகள் |
|---|---|
| 1. | ஒவ்வொரு முன்னோடி இரசாயனப் பதார்த்தத்தின் கட்டளைவைக்கப்பட்ட அளவு / இறக்குமதிசெய்யப்பட்ட கனிய அளவு பதியப்பட்டுள்ளது. |
| 2. | ஒவ்வொரு முன்னோடி இரசாயனப் பதார்த்த கனிய அளவுகளின் தற்போது எஞ்சியுள்ள அளவு பதியப்பட்டுள்ளது. |
| 3. | ஒவ்வொரு முன்னோடி இரசாயனப் பதார்த்தத்தின் உற்பத்திக்காக பிறப்பிக்கப்பட்ட கனிய அளவுகள் பதியப்பட்டுள்ளது. |
| 4. | ஒவ்வொரு முன்னோடி இரசாயனப் பதார்த்தத்தின் மீளக் கிடைக்கப்பெற்ற கனிய அளவு பதியப்பட்டுள்ளது. |
| 5. | ஒவ்வொரு முன்னோடி இரசாயனப் பதார்த்தத்தின் ஆவியாதல் காரணமாக / வழிந்தோடல் காரணமாக வெளியேறிய கனிய அளவு பதியப்பட்டுள்ளது. |